ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2049/8 - 2017 දෙසැම්බර් මස 11 වැනි සඳුදා - 2017.12.11
*2049/8 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

### வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் பிறப்பிக்கப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாண ஆளுநர் நாயகம் அமரா பியசீலி ரத்நாயக்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புப் பிரமாணக் குறிப்பின் பதின்மூன்றாவது திருத்தமைப்பின் 154(ஆ) நிபந்தனையின் (8) (ஆ) உப நிபந்தனையின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் முதலாவது கூட்டத் தொடர் இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு திசெம்பர் மாதம் எட்டாம் திகதி நள்ளிரவிலிருந்து முடிவுறுத்தப்படுகின்றது என்பதை இங்கு அறியத்தருகிறேன்.

இன்னும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புப் பிரமாணக் குறிப்பின் பதின்மூன்றாவது திருத்தமைப்பின் 154(ஆ) நிபந்தனையின் (8) (ஆ) உப நிபந்தனையின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் பதினாறாம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு குருநாகல் மாகாண சபை அலுவலக பல்கூட்டுத் தொகுதியில் (“சஷீ ”) மண்டபத்தில் வடமேல் மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் இரண்டாவது கூட்டத் தொடர் கூட்டப்படும் என்பதையும் இங்கு அறியத்தருகிறேன்.

இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு திசெம்பர் மாதம் எட்டாம் திகதியாகிய இன்று குருநாகலில் வைத்து பிரசுரிக்கப்பட்டது.

அமரா பியசீலி ரத்நாயக்க,
வடமேல் மாகாண ஆளுநர் நாயகம்.

*12-851*

1A - PG 3810 — 13 (2017/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*